**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

| |
|---|
| **நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)** |

**ஜனவரி – பிப்ரவரி 2024**
**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி –எண்கள் குறிப்பன யாவை?
2. அழகும் இளமையும் கெடுவது எதனால்?
3. திரிகடுகத்தில் உள்ள மருந்துப்பொருள்கள் யாவை?
4. எறும்பிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டியது யாது?
5. அறநெறிச்சாரம்–ஆசிரியர் யார்?
6. அழுபவன் கோழை எனத் தொடங்கும் ஆத்திச்சூடியைப் பாடியவர் யார்?
7. சொல்திறம் இன்மையால் நேர்வது என்ன?
8. குமரகுருபரர் இயற்றிய நூல்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. அழகர் கிள்ளைவிடு தூது நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?
10. மதங்கியார் எனப்படுவோர் யார்?
11. தஞ்சைவாணன் கோவையை இயற்றியவர் யார்?
12. முதன்முதலில் தோன்றிய கோவை நூல் எது?
13. இலக்கண விளக்கம் பரணிக்கு வகுத்த இலக்கணம் யாது?
14. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழை இயற்றியவர் யார்?
15. திருக்கைலாய ஞான உலாவின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. இல்லறத்திற்குப் பொருந்தாதவையாக நாலடியார் கூறுவன யாவை?
2. ஈகையின் சிறப்புகளாகச் சிறுபஞ்சமூலம் கூறுவன யாவை?
3. இரண்டு இரவுகள் தனக்குத் தூக்கம் வராது என ஔவையார் கூறக் காரணம் என்ன?
4. சுற்றத்தையும் நட்பையும் ஒப்பிட்டு மூதுரை உரைப்பன யாவை?
5. சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்குரிய காரணங்கள் யாவை?
6. வசந்தவல்லி பந்தாடிய காட்சியைப் புலப்படுத்துக.
7. கலிங்கத்துப்பரணியில் உள்ள போர்க்களக் காட்சிகளை எழுதுக.
8. உலா இலக்கியத்தில் 'பின் எழுநிலை' –விளம்பிச் சான்று தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பதினெண் கீழ்க்கணக்கு அற நூல்களில் வெளிப்படும் கல்வியியல் சிந்தனைகளை ஆராய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) நீதிநெறி விளக்கம் கூறும் அறக்கருத்துகளின் பொருத்தப்பாட்டை ஒப்பிட்டுக் காட்டுக.

2. (அ) குற்றாலக் குறவஞ்சியிலுள்ள இலக்கிய நயங்களையும் பொருட்சிறப்பையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அறநூல்கள் வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிகளைத் தொகுத்தெழுதுக.

3. (அ) முக்கூடற்பள்ளு கூறும் உழவுத்தொழில் குறித்தச் செய்திகளை விவரி?

(அல்லது)

(ஆ) சிற்றலக்கியங்களின் தனிச்சிறப்புகளை வெளிப்படுத்துக.

❋❋❋